**DINA MANI**
**10th September, 2007**

**Translation of articles:**

## ZWM centre inaugurated in Tenkasi Corporation

Present at the inauguration of the ZWM centre in Tenkasi were Mr Gomathynayakan, Commissioner and Mr Kalimuthu, Prashakti school principal. Mrs Vijayalashmi welcomed the guests. The lamp was lit by the principal of Parashakti school. Abhiram Seth - ED Exports and External Affairs, PepsiCo, inaugurated the program.

In the first phase of the programme, three wards 11,14,21 will be covered and will reach out to 1,550 houses. Mr Neelakandan, Director of Environment Department, spoke on the role of the Environment department in Solid Waste Management. Mrs Mangalam - Vice Chairperson, Exnora spoke in depth explaining the project details. Mr S. Ramasubramanian, Assistant Project Officer, received the first harvest of ExOrCo – the organic manure.

**DINA MANI**

## தென்காசி நகராட்சியில் பூஜ்ய கழிவு மைய தொடக்க விழா

தென்காசி, செப். 10: தென்காசியில் எக்ஸ்னோரா, பெப்ஸிகோ அமைப்புகள் சார்பில் பூஜ்ய கழிவு மேலாண்மைத் திட்டம் தொடக்க விழா நடைபெற்றது.

தென்காசியில் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற இவ்விழாவிற்கு தென்காசி நகர்மன்றத் தலைவர் வே. கோமதிநாயகம் தலைமை வகித்தார்.

குற்றாலம் ஸ்ரீபராசக்தி வித்யாலய பள்ளி முதல்வர் எஸ். கல்யாணி சங்கர் குத்துவிளக்கேற்றி விழாவை தொடக்கிவைத்தார்.

விழாவில் எக்ஸ்னோரா இன்டர்நேசனல் துணைத் தலைவர் மங்களம் பாலசுப்பிரமணியன், பூஜ்ய கழிவு மேலாண்மை திட்ட விளக்கவுரை ஆற்றினார்.

சுற்றுச்சூழல் துறை இயக்குநர் கே. எஸ். நீலகண்டன், திடக்கழிவு மேலாண்மையில் சுற்றுசூழல் துறையின் பங்கு குறித்து பேசினார்.

விழாவில் பூஜ்ய கழிவு மையத்தை திறந்துவைத்து, செயல் இயக்குநர் அபிராம்சேத் பேசினார்.

விழாவிற்கு தென்காசி நகராட்சி ஆணையாளர் பி. காளிமுத்து, குற்றாலம் ஸ்ரீபராசக்தி மகளிர் கல்லூரி முதல்வர் வே. சசிகலா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

விழாவில் மண்புழு உரம் முதல் அறுவடையை உதவித் திட்ட அலுவலர் எஸ். ராமசுப்பிரமணியன் பெற்றுகொண்டுபேசினார்.

எக்ஸ்னோரா மாவட்டச் செயலர் பி. சங்கரநாரயணன், தென்காசி நகர்மன்றத் துணைத் தலைவர் இப்ராகிம், தியாகராஜன், முருகேசன், வெங்கடாம்பட்டி அறக்கட்டளைத் தொண்டு நிறுவனர் பூ. திருமாறன், கே. விஜயலட்சுமி, இலஞ்சி ராமசாமிபிள்ளை மேல்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் முத்தையா ஆகியோர் பேசினர்.

எக்ஸ்னோரா மாவட்டத் தலைவர் ஜி.எஸ். விஜயலட்சுமி வரவேற்றார். திட்டக்குழு மேலாளர் வி. பரிசுத்தம் நன்றி கூறினார். தென்காசி சிட்டி எக்ஸ்னோரா செயலர் துரைமீனாட்சிநாதன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்.

விழாவில் ஒருங்கிணைப்பாளர் கார்த்திகேயன், துணைத் தலைவர் ராசிசுரேஷ், வேலு, முருகன், சுகாதார ஆய்வாளர்கள் அப்துல்ஜப்பார், சிதம்பர ராமலிங்கம், முகம்மது அப்துல்ஹக்கீம், சுகாதார மேற்பார்வையாளர்கள் முகம்மது காசிம், தங்கவேலு, முருகன், சுப்பிரமணியன், ஐயப்பன் உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.